මහවැලි සංවර්ධන හා පරිසර අමාත්‍යාංශය
மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
Ministry of Mahaweli Development and Environment

"සම්පත්පාය", අංක 82, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
"சம்பத்பாய", இல 82, இரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல, இலங்கை.
"Sampathpaya", No 82, Rajamalwatta Road, Battaramulla, Sri Lanka.
Gen.Tel. + 94-11-2882112 - 3

ලේකම් / செயலாளர் / Secretary: +94-11-2877290
ෆැක්ස් / தொலை நகல் / Fax: +94-11-2877292

මගේ අංකය / எனது இல / My No: 03/02/02/TF
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2017.03.31

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபை பிரதம செயலாளர்கள்
அனைத்து இராஜாங்க செயலாளர்கள்
அனைத்து மாவட்டச் செயலாளர்கள்
அனைத்துத் திணைக்களத் தலைவர்கள்
அனைத்து நியாயாதிக்க நிறுவனத் தலைவர்கள்

**அரச காணிகளிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுதல்**

வரையறுக்கப்படாத மனிதத் தேவைகளை நிவர்த்தி செய்கையில் இயற்கை வளங்கள் விரைவாக அழிவடைவதுடன், இது தாவர இனங்களுக்குப் பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கென காணிகளைப் பயன்படுத்துகையில் மரங்களை வெட்டி அகற்ற வேண்டிய நிலை ஏற்படுவதுடன், இது பல சூழல் சார் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. தற்சமயம் செயற்பாட்டிலுள்ள பல்வேறு சட்ட திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளுக்கு அமைய மரங்களை வெட்டி அகற்றுவதற்குத் தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்து அனுமதியைப் பெற்றாலும், மரங்களை வெட்டி அகற்றுவதால் ஏற்படக் கூடிய பிரதி கூலமான சூழல் பாதிப்புகள் காரணமாக ஏற்பட்டுள்ள சூழல் பாதுகாப்பற்ற தன்மை தொடர்பில் கூடியளவிலும், பரந்தளவிலும் கவனஞ் செலுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

2. இக் காரணங்களால் கீழே குறிக்கப்பட்டுள்ள அரசுக்குரிய காணிகளுக்குரிய 01 ஹெக்டயாரை விடக் கூடிய நிலங்களிலிருந்து ஒரு தடவையில் 300 மரங்களை விடக் கூடியளவில் மரங்களை வெட்டி அகற்றுகையில் மாத்திரம், அங்கீகரிக்கப்பட்ட சட்ட ரீதியான அனுமதியைப் பெற்றுக் கொடுக்கும் நிறுவனங்களிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுவதுடன் தொடர்புடைய அனைத்து விதமான அனுமதிகளையும் பெற்ற பின் இவ் அமைச்சின் இணக்கத்தைப் பெறுவதற்கு வேண்டுகோள்களை முன் வைக்க வேண்டும்.

1. வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் பரிபாலிக்கப்படுகின்ற காணிகள்
2. வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பரிபாலிக்கப்படுகின்ற காணிகள்
3. தேசிய சுற்றாடல் கட்டளைச் சட்டத்தின் கீழ் உயர் உணர்வு நிலையுடைய வலயங்களாகப் பெயரிடப்பட்டுள்ள பிரதேசங்கள்
4. மகாவலி அதிகார சபையின் கீழ் காணப்படுகின்ற காணிகள்
5. காணி ஆணையாளர் நாயகத்தின் கீழ் காணப்படுகின்ற காணிகள்
6. காணிச் சீர்த்திருத்த ஆணைக் குழுவின் மூலம் நிருவகிக்கப்படுகின்ற காணிகள்
7. விகாரைகள் மற்றும் தேவாலயங்கள் கட்டளைச் சட்டத்தின் மூலம் நிருவகிக்கப்படுகின்ற காணிகள்
8. அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களினால் நிருவகிக்கப்படுகின்ற காணிகள்

3. மரங்களை அகற்றுவதற்கான இணக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கென வேண்டுகோள்கள் முன் வைக்கப்படுகின்ற அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மரங்களை அகற்றுவதால் சூழலுக்கு மிகக் குறைந்தளவான பாதிப்புகள் ஏற்படுவதை உறுதிப்படுத்துவதற்கென வன வளர்ப்பை மேற்கொண்ட வண்ணம், சூழல் தொகுதியை மீள் நிலை நாட்டிச் சூழலைப் பாதுகாக்கும் நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் திட்டமொன்றை முன் வைத்தல் அத்தியாவசியமாகக் காணப்படுவதுடன், அனுமதி வழங்கும் உத்தியோகத்தர்களினாலேயே அத் திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் முறையாகச் செயற்படுத்தப்படுதல் தொடர்ந்து பின் ஆய்வு செய்யப்படுதல் வேண்டும்.

**உதய ஆர். செனெவிரத்ன**
செயலாளர்

பிரதிகள்:

1. சனாதிபதி செயலாளர் - தயவுடன் அறிந்து கொள்வதற்கு
2. பிரதமரின் செயலாளர் - தயவுடன் அறிந்து கொள்வதற்கு
3. அமைச்சரவைச் செயலாளர் - தயவுடன் அறிந்து கொள்வதற்கு
4. கணக்காய்வாளர் நாயகம் - தயவுடன் அறிந்து கொள்வதற்கு
5. பொலிஸ் மா அதிபர், இலங்கை பொலிஸ் - தயவுடன் அறிந்து கொள்வதற்கு / தே. நட. முன்னெடுப்பதற்கு
6. வன பரிபாலிப்பு நாயகம், வன பரிபாலிப்புத் திணைக்களம் - தயவுடன் அறிந்து கொள்வதற்கு / தே. நட. முன்னெடுப்பதற்கு
7. பணிப்பாளர் நாயகம், இலங்கை மகாவலி அதிகார சபை - தயவுடன் அறிந்து கொள்வதற்கு / தே. நட. முன்னெடுப்பதற்கு
8. தலைவர், மத்திய சுற்றாடல் அதிகார சபை - தயவுடன் அறிந்து கொள்வதற்கு / தே. நட. முன்னெடுப்பதற்கு
9. தலைவர், அரச மரக் கூட்டுத்தாபனம் - தயவுடன் அறிந்து கொள்வதற்கு / தே. நட. முன்னெடுப்பதற்கு
10. அனைத்து பிரதேசச் செயலாளர்கள் - தயவுடன் அறிந்து கொள்வதற்கு / தே. நட. முன்னெடுப்பதற்கு